தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விளம்பி, ஆனி 19, திருவள்ளுவர் ஆண்டு 2049

2018 ஜூலை 3, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்.”

வாய்மை என்று சொல்லப்படுவது எது என்றால், அது மற்ற உயிர்களுக்கு தீங்கினைச் சிறிதும் உண்டாக்காத சொற்களைப் பேசுதல் ஆகும்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 251, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

251—

நூலகத்திற்குக் கட்டடம்

***8110-திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அந்தியூர் தொகுதி, அம்மாபேட்டை ஒன்றியம், சென்னம்பட்டி கிராமம், முரளி எம்.ஆர்.கே. நகரில் உள்ள ஊர்ப்புற நூலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

[2018 ஜூலை 3

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஈரோடு மாவட்டம், அந்தியூர் தொகுதி, அம்மாபேட்டை ஒன்றியம், சென்னம்பட்டி கிராமம், முரளி எம்.ஆர்.கே. நகரில், ஊர்ப்புற நூலகம் 5-7-1999 முதல் இலவசக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. திருமதி எல்.சி. பாப்பாத்தி என்பவர் சென்னம்பட்டி கிராம நத்தம் எண் 478-ல் 2,250 சதுர அடி கொண்ட காலி மனையை இதற்காக வழங்கியிருக்கிறார். அரசு அதுகுறித்துப் பரிசீலித்து வருகிறது. அதற்கான புதிய கட்டடம் கட்டுவதற்கு பள்ளிக் கல்வித் துறையின் மூலமாக ரூ.20 இலட்சமும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.10 இலட்சமும் தந்தால் உடனடியாகக் கட்டித் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அழியாப் புகழோடும், அனைவர் மத்தியிலும் அணையா விளக்காகவும் இருக்கின்ற அற்புதத் தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களின் வழியில் சட்டப் போராட்டம் நடத்தி, காவேரியை மீட்டெடுத்து, ஆணையத்தின் முதல் கூட்டத்தில், முதல் மாதத்தில் 31.24 டி.எம்.சி. தண்ணீரைப் பெற்றுக் கொடுத்து, விவசாய மக்களின் வாழ்க்கையில் ஒளியேற்றிய அம்மா கண்டெடுத்த விவசாயியே, இப்பிரச்சினை தீர்க்கப்பட்டதன்மூலம் தமிழக மக்களின் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்கிய பொக்கிஷமே, தமிழக வளர்ச்சிக்கு வித்திட்ட வித்தகரே, தமிழகத்தின் மாண்புமிகு முதல்வரே, தமிழக மக்களின் சார்பிலும், கழகத்தின் சார்பிலும், சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பிலும் நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக்கொள்கின்றேன். இதற்கெல்லாம் உற்ற துணையாகவும், அம்மா அவர்களின் அரசிற்கு பக்கபலமாகவும், கழகத்திற்குத் தூணாகவும் விளங்கும் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும் எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அம்மாவைப்போல் எதற்கும் அசராமல் சபையை நடத்திவரும் எனக்குப் பேச வாய்ப்பு வழங்கிய, போற்றுதலுக்குரிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2018 ஜூலை 3]

அந்தியூர் சட்டமன்றத் தொகுதி, சென்னம்பட்டி கிராமம், முரளி எம்.ஆர்.கே. நகரில் செயல்பட்டுவரும் ஊர்ப்புற நூலகமானது சுமார் 800-க்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டதாகும். இந்நூலகத்தில் 29 பொருள்களின்கீழ் 7,204 புத்தகங்கள் இருக்கின்றன. இந்நூலகத்திற்கு தினசரி 90-க்கும் மேற்பட்ட நபர்கள் வந்து செல்கின்றனர். எனவே, கிராமப்புற மக்களுக்கும், கல்வி பயிலும் மாணவ, மாணவிகளுக்கும் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் பதில் உற்சாகமூட்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்தியூர் தொகுதி, தவிட்டுப்பாளையத்தில் செயல்பட்டுவரும் அரசு உயர்நிலைப் பள்ளி 345 மாணாக்கர்களைக் கொண்ட பள்ளியாகும். இப்பள்ளியில் 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை 12 பிரிவுகள் உள்ளன. ஆனால், இதற்கு 9 அறைகள் மட்டுமே உள்ளன. வகுப்பறைகள் பற்றாக்குறையால் ஒரே வகுப்பறையில் 2 பிரிவுகள் செயல்படும் சூழ்நிலை உள்ளது. மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களும் ஏற்கெனவே இதைப்பற்றி அறிந்திருக்கிறார்கள். எனவே, கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து செயல்பட்டுவரும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசை வழிநடத்தும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்பேரில், பள்ளிக் கல்வித் துறையை இந்தியாவே வியக்கும் அளவிற்கு jet *வேகத்தில் கொண்டு செல்லும் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், இந்தப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைகளை விரைவாகக் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவிட்டுப்பாளையத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்துள்ள அந்தப் பகுதியில் உள்ள பள்ளியை எனக்கு நன்றாகத் தெரியும். அங்கு கட்டடம் கட்டுவதற்கான இட வசதியும் இருக்கிறது. இந்த ஆண்டு அங்கு தேவையான கட்டடங்களைக் கட்டுவதற்கு நபார்டு திட்டத்தில் இணைக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன் அவர்கள்.*

முற்பகல் 10-05

திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தனியார் பள்ளியில் படிக்கும் மாணாக்கர்களுக்கும், அரசு பள்ளியில் படிக்கும் மாணாக்கர்களுக்கும் இடையே ஏற்றத்தாழ்வுகளைக் களைய செயல்படுத்திய பல்வேறு புரட்சித் திட்டங்களில் வண்ண வண்ண சீருடை வழங்கும் திட்டமும் ஒன்றாகும். இதனால், தனியார் பள்ளி மாணாக்கர்கள், அரசுப் பள்ளி மாணாக்கர்கள் என்ற வித்தியாசம் தெரியாமல் அரசுப் பள்ளி மாணாக்கர்கள் மத்தியில் சந்தோஷத்தையும் மகிழ்ச்சியையும் நேரடியாகக் காண முடிகிறது. இவர்கள் மேலும் சந்தோஷமடைய விளையாட்டு* period-*களில் விளையாடுவதற்கென்று தனிச் சீருடை வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல சீருடைகள் மாற்றம் என்பது ஒரு வரலாற்றைப் படைத்த நிகழ்ச்சி. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசை தலைமையேற்றிருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கிருஷ்ணகிரியில்கூட ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொண்டபோது, 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை மற்றும் 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு அடுத்த ஆண்டு சீருடையை மாற்றியமைப்பதற்கான அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள். ஆகவே, தனியார் பள்ளிகள் வியக்கத்தக்க அளவிற்கு சீருடைகளை மாற்றியமைப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. விளையாட்டு* period-*ல் விளையாடுகின்ற மாணவர்களுக்கும் சீருடைகள் கொடுக்கப்படுமா என்ற ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். அதுகுறித்து அந்தத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் கேட்க வேண்டும்.*

2018 ஜூலை 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.*

திரு. கரி. இராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே நூலகங்கள் இருந்தாலும், நூலகங்களில் போதுமான நூல்கள் இல்லாத நிலை இருக்கிறது. பொதுவாக பல நல்ல நூல்கள் வெளிவருகின்றன. ஆனால், அவற்றை வாங்கி இதுபோன்ற நூலகங்களுக்கு அரசு வழங்குகிறதா? இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு எத்தனை நூல்கள் அவ்வாறு வாங்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியின் தலைவர் அவர்கள், எவ்வளவு நூல்கள் புதிதாக வாங்கப்பட்டிருக்கின்றன என்ற ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். பல்வேறு அறிஞர்களுடைய நூல்கள் இன்றைக்கு வந்துகொண்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் இந்த அரசு பயன்படுத்துகிறதா என்ற ஒரு கேள்வியையும் கேட்டிருக்கிறார்கள். இந்த அரசைப் பொறுத்தவரை நூலகங்களுக்கென குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் குழுக்கள் அதைப்பற்றிப் பரிசீலித்து, எந்தெந்த நூல்களை புதிதாக வாங்கலாம் என்று பரிந்துரைத்த பிறகு அந்த நூல்களைப் பெற்று நூலகங்களுக்கு வழங்கிக்கொண்டிருக்கிறோம். இலங்கையிலே ஏற்பட்ட போரினால் யாழ்ப்பாணத்தில் இருக்கிற நூலகங்கள் தகர்த்தெறியப்பட்டன. அவற்றுக்குக்கூட ஒரு இலட்சம் நூல்கள் வழங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டு, நூல்கள் பெறப்பட்டிருக்கின்றன. ஆகவே, இந்திய நாட்டில் மட்டுமல்ல தமிழர்கள் எங்கெங்கே இருக்கிறார்களோ, அங்கெல்லாம் நூல்கள் வழங்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. அதேநேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எவ்வளவு நூல்கள் வாங்கப்பட்டுள்ளன என்ற புள்ளிவிவரத்தைக் கேட்டிருக்கிறார்கள். அந்தப் புள்ளிவிவரம் என்னிடத்தில் தற்போது இல்லை. அந்தப் புள்ளிவிவரம் கிடைத்தவுடன் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அது தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே ஏறத்தாழ 1,900-க்கும் மேற்பட்ட ஊர்ப்புற நூலகங்கள் இருக்கின்றன. இங்கே பணியாற்றக்கூடிய ஊர்ப்புற நூலகர்களின் பணி மிக முக்கியமானது. கிராமங்களிலே அவர்கள்தான் அந்த நூலகங்களுக்கான பணியினை மிகச் சிறப்பாக மேற்கொண்டு வருகிறார்கள். இவர்களிலே ஒரு பகுதியினருக்கு 2008 ஆம் ஆண்டிலே காலமுறை ஊதியம் வழங்கப்பட்டது. தொடர்ந்து, 19-2-2016 ஆம் நாளன்று நடைபெற்ற பேரவைக் கூட்டத் தொடரில் மறைந்த அம்மையார் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது சிறப்பு காலமுறை ஊதியத்தில் பணியாற்றுகிற அந்த ஊர்ப்புற நூலகர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்கப்பட்டு, அவர்களுடைய பணி வரன்முறை செய்யப்படும் என்று பேரவை விதி 110-ன்கீழ் அறிவித்தார்கள். அந்தத் திட்டம், அவர்களுடைய அறிவிப்பு நிலுவையில் இருக்கிறது. எனவே மிக விரைவிலே ஊர்ப்புற நூலகர்களுக்கு காலமுறை ஊதியத்தை வழங்கி அவர்களுடைய வாழ்விலே ஒளியேற்றுவதற்கு அரசு முன்வருமா, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்வார்களா என்பதை நான் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தம் 1,913 ஊர்ப்புற நூலகங்கள் இயங்கி வருகின்றன. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபொழுது, அந்த நூலகத்தில் பணியாற்றுகிற நூலகர்களுக்கு காலமுறை ஊதியத்தை வழங்குவது குறித்து பேரவை விதி 110-ன்கீழ் அறிவிப்பு வெளியிட்டதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அதுகுறித்து அரசு பரிசீலித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 252, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.